# ஸ்ரீ வல்லபா

## சாந்திப்பிரியா



1300 ஆம் ஆண்டு கிழக்கு கோதாவரி கரையில் உள்ள பீதாபுரம் என்ற ஊரில் அப்பலராஜு சர்மா என்ற அந்தணர் இருந்தார். இது ஆந்திரப் பிரதேச மானிலத்தில் உள்ளது. அவர் மனைவியின் பெயர் சுமதி. அவள் சிறந்த பதிவிரதை. அவர்கள் இருந்த இடத்தை சுற்றி நிறைய பகவான் சிவபெருமான் மற்றும் பகவான் விஷ்ணு ஆலயங்கள் இருந்தன. புராணங்களின்படி பீதாபுரம் மிகவும் புனிதமான இடம் என்று கூறப்படுகின்றது. சுமதி மற்றும் அப்பலராஜு தம்பதியினருக்கு பல குழந்தைகள் பிறந்து இறந்து போயினர். ஆனால் அவர்களின் போதாத காலமோ என்னவோ அப்படி பிறந்திருந்த குழந்தைகளில் உயிர் பிழைத்து இருந்த இரண்டு குழந்தைகள் உடல் கோளாறுடன் இருந்தன. ஒருவனுக்கு காது கேட்காது. மற்றவன் முடமானவன். பிறந்து விட்டப் பிள்ளைகளைத் தூக்கியா போட முடியும். அவர்களையும் மற்ற குழந்தைகளை போலவே அன்புடன் வளர்த்து வந்தனர்.

இருவர் மனதிலும் அது பற்றிய கவலை இருந்தாலும் கடவுள் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை இருந்தது. இருவரும் அந்த துயரமான மன நிலையிலும் சாது, சன்யாசிகள் என வந்தவர்களுக்கு சாப்பாடு போடாமல் அனுப்பியது இல்லை.

காலம் உருண்டது. ஒரு நாள் அவர்கள் வீட்டில் புண்ணியாவசனம் செய்தனர். காரியம் முடிந்ததும் சாப்பிட அந்தணரை அழைத்து வர அப்பலராஜூ சென்றிருந்தார். அந்த நேரத்தில் பகவான் தத்தாத்திரேயர் அவர்கள் வீட்டிற்கு ஒரு துறவி உருவில் வந்து பிட்சைக் கேட்க, பதிவிரதையான சுமதியும் வந்திருந்த துறவி யார் என்பதைப் புரிந்து கொண்டாள். ஆனால் தானும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவர் போதும் போதும் என்று சொல்லும் அளவிற்கு உணவு போட்டு உபசரிக்க, மனம் மகிழ்ந்து போன பகவான் தத்தாத்திரேயரும் தன் உண்மையான சொரூபத்தைக் அவளுக்குக் காட்டிய பின் தான் திரும்பச் செல்லும் முன் கூறினார் 'தாயே உன் குணத்தைக் கண்டு என் மனம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றது. வீட்டிற்கு போஜனத்திற்கு வரும் பிராமணர்கள் அருந்தும் முன்பே பசி என்று கேட்டு வந்த எனக்கு வயிறாற உணவு தந்தாய். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் தருகிறேன். சற்றும் தயங்கவில்லை சுமதி. தன் இரண்டு குழந்தைகளின் நிலையை எடுத்துக் கூறிய பின் தனக்கு அவரைப் (பகவான் தத்தாத்திரேயர்) போன்ற ஒரு மகன் பிறக்க வேண்டும் என வேண்டினாள். அவரும் அந்த வரத்தைத் தந்த பின் திரும்பச் சென்று விட்டார்.

வீடு திரும்பிய கணவனிடம் நடந்ததைக் கூறியவள், மீண்டும் சமைத்து அவருடன் வந்திருந்த அந்தணர்களுக்கு வயிறு நிறைய சாப்பாடு போட்டு அனுப்பினாள். பகவான் தத்தர் அருளிபடியே அடுத்த சில மாதங்களில் அவள் கருவுற்று நல்ல குழந்தையைப் பெற்று எடுத்தாள். பகவான் தத்தாத்திரேயர் கூறியது போலவே பகவான் தத்தரே அவள் கருவில் சென்று அவர்களின் மகனாக அவரதரித்தார். அந்த மகனே பகவான் தத்தாத்திரேயரின் முதலாவது அவதாரமான வல்லபா ஆவார். வேத பாடங்களிலும், சாஸ்திரங்களிலும் அபாரமான அறிவு பெற்ற அவர் பிற்காலத்தில் மாபெரும் யோகியாக விளங்குவார் என ஜோதிடர்கள் கூறி இருந்தனர். அவருக்கு எட்டு வயதான பொழுது பூணுல் போட்ட பின் வேத பாடங்களை பயிற்சி செய்ய ஆரம்பித்து விட்டார். பதினேழு வயதான பொழுது அவருக்குத் திருமணம் செய்ய முனைந்தனர். ஆனால் வல்லபாவோ தான் ஒரு சன்யாசி என்பதால் தனக்கு திருமணம் செய்யக் கூடாது எனக் கூறி அவர்களைத்

தடுத்து விட்டார். 'எங்கள் காலத்திற்குப் பின்னர் உன்னுடைய குருடும் நொண்டியுமான இரண்டு சகோதரர்களையும் காப்பாற்றவாவது இந்த வீட்டில் ஒரு பெண் வேண்டுமே. இல்லை எனில் அவர்களை கவனித்துக் கொள்ள யார் இருப்பார்கள்' எனக் கூறி அழுதனர். 'கவலைப்படாதீர்கள்' என்றார் ஸ்ரீ வல்லபா. அது மட்டும் அல்ல 'நான் இருக்க பயம் ஏன்' என்றவர் அந்த இரண்டு சகோதரர்களையும் அருகில் அழைத்தார். சற்று நேரம் அவர்களையே பார்த்துக் கொண்டு இருந்த பின் அவர்களை தன் கைகளால் தடவிக் கொடுக்க கண் பார்வை அற்றவன் பார்வை பெற்றான். முடமானவன் எழுந்து நடக்கலானான். தங்களுடைய மூன்றாம் மகனின் அற்புதத்தைக் கண் எதிரே கண்ட பெற்றோர் ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதனர். பகவான் தத்தர் அப்போது அவர்கள் முன் தோன்றி ஸ்ரீ வல்லபாவின் மூலம் தன் அவதாரத்தைக் காட்டினார். அப்பொழுதுதான் அனைவரும் புரிந்து கொண்டனர் ஸ்ரீ வல்லபா வேறு யாரும் அல்ல, சாட்சாத் பகவான் தத்தரின் அவதாரமே என.

தான் எடுத்த பிறப்பிற்கு சில காரணம் உண்டு என்றும் ஆகவே தன் கடமைகளைச் செய்ய தான் போக வேண்டும் என்று கூறி விட்டு யாத்திரைக்குக் கிளம்பினார் ஸ்ரீ வல்லபா. நாட்டின் பல பகுதிகளுக்கும் யாத்திரை சென்று தெய்வீகத்தைப் பரப்பிய வண்ணம் இருந்தவர் ஒருமுறை ஆந்திராவில் கிருஷ்ணா நதிக் கரை அருகில் குளிக்கச் சென்றார். அந்த கால கட்டத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் முகமதிய மன்னர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் இருந்தனர். அவர் குளித்துக் கொண்டு இருந்த அதே ஆற்றில் ஒரு வண்ணானும் துணிகளைத் துவைத்தபடி இருந்தான். அவன் இருந்த இடத்திற்கு சற்று தள்ளி ஒரு பெரிய பணக்கார நவாப் தன் குடும்பத்தினருடன் குளித்துக் கொண்டு இருந்தார். அந்த வண்ணான் ஏழை என்றாலும் பகவான் தத்தாத்திரேயரின் பக்தன். அவரிடம் அளவு கடந்த பக்தி கொண்டவன். அந்த நவாப்பைக் கண்டவன் மனதில் நினைத்தான், 'எனக்கும் இப்படி பணமும் பொருளும் இருந்தால் எத்தனை நலமாக இருக்கும்?' தூரத்தில் இருந்த வல்லபாவின் இருதயத்தில் அந்த பக்தனின் ஏக்கக் குரல் ஒலித்தது. பிறகு என்ன நீயும் அடுத்த பிறவியில் அவனைப் போலவே பெரும் பணக்காரனாகப் பிறப்பாய் என ஆசிர்வதித்தார். அவன் அடுத்த பிறவியில் பெரும் செல்வந்தனாகப் பிறந்து தத்தரின் அடுத்த அவதாரப் பிறவியான நரசிம்ம ஸரஸ்வதியின் பரம சீடன் ஆனான். அதை அவன் தன் முன் பிறவியை கணித்துக் கூறிய ஜோதிடர்கள் மூலம்

தெரிந்து கொண்டான். பகவான் தத்தத்திரேயரின் மகிமையைக் கண்டு ஆனந்தம் கொண்டான்.

இன்னொரு முறை அம்பிகா என்ற ஒரு பிராமணப் பெண் நதியில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயன்ற பொழுது அவளை அப்படி செய்வது பாபம் என ஶ்ரீ வல்லபா தடுத்து நிறுத்தினார். அவளும் தன்னால் தன் வறுமையைத் தாள முடியாமல் இந்த முடிவுக்கு வந்ததாகவும், உதவாக்கரையாக இருக்கும் தன்னுடைய மகனால்தான் இந்த முடிவுக்கு வந்ததாகக் கூறினாள். அதை கேட்டு அவளுக்கு அருள் புரிந்து வறுமையை போக்கியவர், தன்னுடைய அடுத்தப் பிறவியில் அவளுக்கே மகனாகப் பிறந்து அவள் மன மகிழ்ச்சியுடன் இருக்க உதவ வேண்டும் என நினைத்தே ஶ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஸ்வாமியாக அவதரித்தார் என்ற கதையும் உண்டு. இப்படியாக பல இடங்களிலும் சென்று செவிடர்களுக்கு காது கேட்கச் செய்தும், நோய்களில் அவதிப் பட்டவர்களை குணமாக்கிக் கொண்டும், பக்தர்களுக்கு பல்வேறு வகைகளிலும் ஆசிகள் கூறி தெய்வீகத்தைப் பரப்பி பல அற்புதங்களை செய்து வந்தவர் கங்கைக் கரைக்குச் சென்று அங்கு பிரார்த்தனைகள் புரிந்த பின் ஜல சமாதி எய்து மறைந்து போனார்.

# Shri Vallabha

## Santhipriya



In the year 1300, a Brahmin by name Appala Raju was living in village Peethambara by the side of river Godavari which was surrounded by several temples of Lord Shiva and Lord Vishnu. Peethambara is in Andhra Pradesh. The name of his wife was Sumathi. She was a chaste wife and according to Puranas, Peethambara is a holy place. The couple delivered several children, but unfortunately, all of them died in one reason or the other. However two of the children remained alive, but they were with physically challenged- one cannot hear and the other handicapped. Even then the couple brought up the children well showering love and affection with the fond hope that God would take care of them on some day. However Inspite of mental stress,

they never let any of the saints and sages go away without taking food in their home whenever they came there.

Days passed, and a ritual was performed at home and Appala Raju went out to call some Brahmins to partake food which was usually done at the end of the ritual. When he went out to bring some Brahmins, Lord Dattathreya visited their home in the guise of a Sanyasi and Appala Raju's wife being a chaste woman could identify the Lord and without showing it out, she offered him enough food till his hunger was satiated. Pleased with her pleasing manner in respecting the saints and sages, the Lord appeared before her in his true form and offered to give her any boon which she would ask. Sumathi did not think for a second and instantly narrated their mental ordeal on account of the two physically challenged sons and requested his grace to have another son who would in all aspects be hale and healthy like the Lord himself. H granted the boon as desired by her and went away.

She informed the visit of the Lord, the boon she received and asked the Brahmins to rest for a while, cooked fresh food and offered them to their satisfaction satiating their hunger. In the next few months the couple bore a son who was incarnate of Lord Dattathreya himself, fact of which was not known to them. The boy was named Sri Vallabha who grew up learning Veda Sasthras with high degree of wisdom and at the age of eight, the threat warming ceremony was performed and when he attained the age of seventeen, his parents attempted to formalise his marriage. But Sri Vallabha turned down their request telling that he was a born sanyasi manifested for some reason. His parents pleaded with him to marry as none were there to look after their physically challenged brothers after their demise. Shri Vallabha consoled his parents not to panic, called his two brothers near him, looked at their eyes for some time and warmly tendered their back. What a wonder, in the next moment both of them became

normal persons, the blind got eye sight and the handicapped began walking. The excited parents wept uncontrollably at the miracle cure when Sri Vallabha appeared before them in his true form- Lord Dattathreya- and made them understand that the promise given by him to Sumathi that he would be born to them was real.

Later on he told them that he had indeed incarnated for certain specific reasons and therefore took leave from them and began touring across the width and breath of the country. Wherever he visited, he displayed miracles and spread divinity and in one such voyage reached the bank of river Krishna in Andhra Pradesh. Everyone not only took bath in the river but also washed their clothes in the river. On the day as he went there, a poor washer man yearned at the sight of a powerful Nawab taking bath thinking whether he would also become rich like him at some stage. The feelings of the washer man when touched the heart of Shri Vallabha who was also taking bath there, he blessed him to born a rich person in the next birth. The washer man in his next birth got born rich and became disciple of Sri Narasimha Saraswathi Swami and learnt of the truth of his birth through sooth sayers and felt immensely happy at the grace of Lord Dattathreya.

In another incident one Brahmin woman named Ambika attempted to commit suicide by jumping into the river out of frustration. Sri Vallabha saved her. She complained to him that she was unable to live in peace because of her useless son, hence Shri Vallabha himself manifested as Shri Narasimha Saraswathi Swami to the same woman in his next birth to help her live in peace and cured those who cannot hear and others with deformities further spreading divinity throughout the land for many years and finally entered into river Ganges, never to come out and disappeared for ever.